**தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 19 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 01 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (1) (ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1. செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலதன செலவின விடயங்கள் 04 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 15,700,000 ஆன மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் 44 சதவீதத்திற்கு மேலதிகமாக, அதாவது ரூபா 6,954,661 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அவ் ஒவ்வொரு செலவின விடயங்களின் சேமிப்புகளும் 11 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மதிப்பிடுகளினை விட செலவு குறைந்தமை மற்றும் செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டது. | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது நிதி பிரமாணம் 50 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதி கட்டுப்பாடுக்காக ஆக்கப்பூர்வத் தன்மையுடைய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றமை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் பயனுறுதித் | நிதிக் கட்டுப்பாட்டிற்காக முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக முன்னேற்ற மீளாய்வு குழு கூட்டமொன்று நடத்தப்பட்டிராததுடன் இந்த | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாக மேற்கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அவ் மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொண்டமைக்கான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையின் ஆக்கப்பூர்வத் தன்மை தொடர்பாக மீளாய்வு செய்தல் கடினமான பணியாகியுள்ளது. அதனால் மீளாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு முடியாததுடன் எதிர்காலத்தில் அவ்வாறு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **பெறுமதி (ரூ.)** | **இணங்காமை** | | |
| **(அ)** இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 371 (2) | 113,355 | பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் பணி முடிவடைந்த உடனே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் வெவ்வேறு பணிகளுக்காக 05 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய நாளிலிருந்து 14-164 நாட்கள் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | புகையிரதம் மற்றும் தபால் ஊடாக கடிதங்கள் போக்குவரத்திற்காக பெற்றுக் கொள்ளப்படும் முற்பணம் பிரதேச அலுவலகம் ஊடாக தீர்க்கப்படும் போதான தாமதம் காரணமாக மற்றும் வவுசர் அபிவிருத்தி பிரிவிலிருந்து கணக்கு பிரிவிற்கு தாமதித்து பெறப்பட்டமை காரணத்தினால் முற்பணம் தீர்க்கப்படல் தாமதமாகியது. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 02/2018 மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | | |
| **(i)** 1 ஆம் பந்தி | - | நிறுவனத்தில் சேவையிலுள்ள ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 02/2018 இன் 01 ஆம் மாதிரியின் பிரகாரம் இந்த திணைக்களத்தின் ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் தற்போது தயாரிக்கப்பட்டிராதது டன், வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் தயாரிக்கும் அடிப்படை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ii)** 4 ஆம் பந்தி | - | அரச சேவையினுள் மையமாகவுள்ள மனிதவளம் நாட்டின் அபிவிருத்திக்காக மிகவும் வினைத்திறனாக மற்றும் பயனுறுதி மிக்கதாக ஈடுப்படுத்துவதற்காக அரச துறைக்கு சொந்தமாகவுள்ள மனிதவளத்தினை திட்டமிட்டு அபிவிருத்தி செய்தல் அத்தியாவசியமான தேவை ஒன்றாகும். நிறுவனத்தின் பதவியணியின் அனைவருக்கும் காணப்படுகின்ற மற்றும் காணப்பட | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 02/2018 இன் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்தல்,அறிவுத்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேம்படுத்தல், திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தல் தொடர்பான பொறுப்பு பணித்தலுக்காக சிரேஷ்ட சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தர் ஒருவர் நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய திறன்கள் இடையேயான இடைவெளியினை தீர்ப்பதற்காக தயாரிக்கப்பட வேண்டிய மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (இ) 05/2008 மற்றும் 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | பிரசைகள்/சேவை பெறுநர்கள் பட்டயத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1999 இன் 46 ஆம் இலக்க சமுதாய அடிப்படை சீர்திருத்த சட்டம் நீதிமன்றங்களில் செயற்படுத்தும் போது பொது மக்களுடன் நேரடியாக தொடர்பு படாததுடன், பொதுமக்களுக்கு தகவல்கள் வெளிப்படையாக வழங்குவதற்கு முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு. விசேடமாக பிரதான அலுவலகங்களில் பொது மக்களுடன் நேரடி தொடர்பு காணப்படாது. எனினும் பிரசை / சேவை பெறுநர் பட்டய கருத்தினை திணைக்களத்தினுள் தாபிப்பதன் தேவைப்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டு திணைக்களத்திற்கு பொருத்தமான மற்றும் தகுதியான பிரசை சேவை பெறுநர் பட்டயத்தை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயலாற்றல் திட்டத்தில் பிரதான 10 செயற்பாடுகள் அடையாளப்படுத்தப்பட்-டுள்ளதுடன் அதில் 08 பணிகளின் போதுமான செயலாற்றல் அடையப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பிரதான பணியான நீதிமன்றத்தின் ஊடாகநெறிதவறியவர்களுக்காகச முதாய மட்டத்திலான சீர்திருத்த கட்டளை பெற்றுக்கொள்வதற்காக ஆண்டினுள் 20,000 நெறிதவறியவர்களுக்காக கட்டளை பெற்றுக் கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாராக 4,674 நெறிதவறியவர்கள் மட்டும் சமுதாய அடிப்படை சீர்திருத்த கட்டளை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர். | ➢ கொவிட் தொற்று நிலையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சுகாதார சட்ட பிரமாணங்களினுள் நீதிமன்றத்தினால் நீதிமன்ற நடவடிக்கைகள் மட்டுப்படுத்தல் மற்றும் சமுதாய அடிப்படை சீர்திருத்த கட்டளைகள் பெற்றுக் கொடுத்தல் மட்டுப்படுத்தப்படல் காரணத்தினால் அவ் இலக்கு பூர்த்தி செய்தல் மட்டுப்படுத்தப்பட்டது.<br><br>➢ சுய தொழில் செயற்திட்டங்கள் மேற்கொள்வதற்கு தேவையான கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக வங்கிகளின் உதவி தேவைப்படுகின்றதுடன்,நெறிதவறியவர்களுக்கு கடன் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக வங்கிகளிடமிருந்து இது வரையில் நேர்மறையான பதில் பெறப்படாமை. | செயல் நடவடிக்கை திட்டத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் போதுமான செயன் முன்னேற்றம் அடையப்படக் கூடிய பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2. பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2006 4 (2) பிரிவின் பிரகாரம் குறைந்த பட்சம் 03 ஆண்டுகளுக்காக எதிர்பார்க்கின்ற பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அப் பிரிவில் 2006 4(2) இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பெறுகை நடவடிக்கை | ஒவ்வொரு பெறுகை செயற்பாட்டினதும் படிமுறை காண்பிக்கும் வகையில் விரிவான பெறுகை திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டிராததுடன் எதிர்வரும் ஆண்டிலிருந்து அத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அரச பெறகை வழிக்காட்டி கோவை 2006 4(2) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

ஆரம்பிக்கும் இடத்திலிருந்து முடிவுறுத்து வரை, ஒவ்வொரு பெறுகை செயற்பாட்டினதும் படிமுறை காண்பிக்கும் வகையில் விரிவான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்காக மட்டும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

**4. நல்லாளுகை**

**4.1. உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பதவியொன்று தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் பொது நிர்வாக அமைச்சினால் இது வரையில் உள்ளக கணக்காய்வு பதவிக்காக உத்தியோகத்தரொருவர் இணைக்கப்படவில்லை. | 2018 இன் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் திணைக்களத்தின் சிரேஷ்ட நிலையில் 03 பதவி வெற்றிடங்களும்,மூன்றாம் நிலையில் 19 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 12 பதவி வெற்றிடங்களும், முதலாம் நிலையில் 06 பதவி வெற்றிடங்களுமாக 40 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | சிரேஷ்ட நிலையின் வெற்றிடங்களில் 01 உள்ளக கணக்காய்வாளர் மற்றும் 01 இலங்கை நிர்வாக சேவை பதவியினை நிரப்பபுவதற்காக பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்திற்குரிய பதவிகளுக்காக தேவையான தகைமைகளுடைய உத்தியோகத்தர்கள் தற்போது திணைக்களத்தினுள் இல்லை.<br><br>மூன்றாம் நிலையின் வெற்றிடங்களினுள் சிரேஷ்ட சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தர்கள் பதவிகள் 10 இற்காக உத்தியோகத்தர்கள் | பொருத்தமான உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களுக்காக நிரப்பபட்டு பயனுறுதிமிக்க சேவை நிலையொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

ஆட்சேர்ப்பு செய்வதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகளை உடைய விண்ணப்பப்படிவங்கள் பெறப்படவில்லை. நிர்வாக உத்தியோகத்தர், மொழி பெயர்பாளர் மற்றும் இரண்டாம் நிலை பதவிகள் 12 மற்றும் முதலாம் நிலை பதவிகள் 06 இன் வெற்றிடங்கள் நிரப்புவதற்காக நிகழ்நிலை ஊடாக விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.